**கவனிக்க** .- *13.12.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1842 - 2013 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2013.12.20**

*1842 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | 3400 |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# துணை விதிகள்

## வெலிகேபொல பிரதேச சபை

துணை விதிகள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் வெலிகேபொல பிரதேச சபையினால் சம்மதிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப் பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை உள்ளூராட்சி விடயப் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கப்படு கின்றது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,
புதிய நகரம்,
இரத்தினபுரி.

### வாகனங்களின் பாரங்கள் மற்றும் வேகங்கள் அளவைக் கட்டுப்படுத்தல் பயணித்தலை முறைமைப்படுத்தல் சம்பந்தமான இடைக்கால யாப்பு

1. இந்த இடைக்கால யாப்பு சபை பாதைகளில் பயணிக்கும் வாகனங்களின் பாரம் மற்றும் வேகத்தை கட்டுப்படுத்தல் மற்றும் பயணத்தை முறைமைப்படுத்தல் யாப்பு எனக் கொள்ளப்படும்.

2. வெலிகெபொல பிரதேச சபையின் பிரதேச சபைப் பாதை என பிரேரிக்கப்படும் மற்றும் வேறு திணைக்களங்களுக்கு சொந்தமற்ற பிரதேச சபையின் அதிகாரமுள்ள பிரதேச சபையினுள் நிர்வாகப்படுத்தல் (கட்டுப்படுத்தல்) பயண வேகம் மற்றும் பாரத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் பாதைகளுக்கு ஏற்படும் சீர்கேடுகளை (இடையூறுகளை) கட்டுப்படுத்தல் என்பன இந்த இடைக்கால யாப்பில் கூறப்படும் நோக்கங்களாகும்.

3. இந்த இடைக்கால யாப்பில் கூறப்படுகிறது.

4. (1) இங்கே பிரதேச சபையின் தலைவரால் அறிக்கப்படும் 1 ஆவது உப பிரிவில் கூறப்படும் தொகையை செலுத்தி பெறப்பட்ட அனுமதி அட்டை இருந்தாலன்றி மேற்கூறப்பட்ட 2 ஆவது யாப்பில் உள்ளப்படி பாதையில் பாரம் டொன் 2 க்கு கூடிய டிப்பர், லொறி வாகனம் ஒன்று, டெக்டர் ஒன்று, பாதை சீர்செய்யும் இயந்திரம் ஒன்று பயணித்தல் அல்லது இறப்பர் தயாரிக்கும் பொருட்கள் ஏற்றும் வாகனம் பயணித்தல் ஆகாது. மேலும் பாதையில் மிருகங்கள் மூலம் அல்லது டெக்டர் மூலம் பலகைகள் மர கட்டைகள் அல்லது வேறு பொருட்கள் இழுத்தல் அல்லது இழுத்து செல்லுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

(2) 1 ஆவது உப பிரிவில் கூறப்படும் தொகையை மாற்றும் அதிகாரம் வெலிகெபொல பிரதேச சபைக்கு உண்டு.

(3) காற்று நிரப்பும் டயர்கள் (சில்லுகள்) இல்லாத எந்த ஒரு வாகனமும் வேறு வாகனங்களில் ஏற்றிச் செல்லுதல் அன்றி பிரதேச சபையின் எந்தவொரு பாதையிலும் பயணித்தல் கூடாது.

5. பிரதேச சபையின் பாதையில் பயணிக்கக்கூடிய அதிகூடிய எல்லை மணித்தியாலங்களுக்கு கிலோ மீற்றர் 25 ஆகும்.

6. பிரதேச சபை மூலம் வேறு சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தாலன்றி இதில் 2 ஆம் உப பிரிவில் கூறப்பட்டுள்ள இடங்களில் அந்த உப பிரிவில் கூறப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்துக்குள் வாகனம் நிறுத்தி வைக்கப்படக் கூடாது.

7. (1) எந்த ஒரு நபரும் இந்த இடைக்கால யாப்பின் 2 ஆவது யாப்பில் குறிக்கப்படும் பாதையில் எந்த ஒரு கட்டிட நிர்மான பொருட்கள் விவசாய உற்பத்தி பலகை அல்லது இயந்திர உபகரணம் பயணித்தல் ஏற்றி செல்வதாயின் அது சம்பந்தமான எழுத்து மூல விண்ணப்பம் ஒன்று சபையின் தலைவருக்கு குறிப்பிட்ட 3 நாளுக்கு முன் விண்ணப்பித்திருக்க வேண்டும்.

(2) மேலே 7.1 யாப்பின் படி விண்ணப்பம் கிடைத்த காலத்தின் தலைவரால் நிலஅளவையாளரால் அல்லது தலைவரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட அதிகாரியிடம் அறிக்கை ஒன்றின் மூலம் குறிப்பிட்ட பணத்தொகை மற்றும் சேதம் அடையக்கூடிய அளவுக்கு ஏற்ற அளவில் பிணைக்காக வைப்புப் பணம் வைப்பிடப்பட வேண்டும்.

(3) மேலே 7.2 யாப்பின் கீழ் பிணை வைப்புப்பணம் மற்றும் குறிப்பிட்ட பணத்தொகை பெறப்பட்ட பின்பு ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னன்றி குறிப்பிட்ட அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(4) மேலே 7.3 யாப்பின் கீழ் பெறப்பட்ட பிணை வைப்புப் பணம் விளக்கமளிப்பதற்காக விண்ணப்பிக்கும்போது அளவில், 10% திணைக்கள பணமாகவும் பின்னர் சேதம் அடைந்திருப்பின் அதற்கான நஷ்டமானது பெறுமதி குறிப்பிடப்பட்டு பெறப்படுதல் வேண்டும்.

(5) சேதத்துக்கான பிணை வைப்புப்பணம் மேலதிகமாக தேவைப்படின் அந்த மேலதிக பணத்தை கட்டும் படி உரிய நபருக்கு அறிவித்தல் செய்ய வேண்டியது சட்ட ரீதியானதாகும். அதே போல் மிகுதிப்பணத்தை கட்டும் படி அறிவிக்கும் போது உரியவர் அதை செலுத்தாமல் விட்டால் ஏதாவது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து மீதிப்பணத்தை பெற்றுக்கொள்ளுவதற்கு பிரதேச சபைக்கு பலம் (அதிகாரம்) உண்டு.

(6) மேலே கூறப்பட்ட 7.5 யாப்பின் படி அதன் ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதற்கு வெலிகெபொல பிரதேச சபையின்

தலைவரால் அதன் உதவு தொகையினை வழங்குவதற்கு பிரதான சபையின் அனுமதியின் கீழ் பிரதேச சபையின் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

8. பிரதேச சபையுடன் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அதற்குரிய ஒப்பந்தங்களுக்கு முன்வரும் ஒப்பந்தக்காரரால் தலைவரிடம் எழுத்துமூலமான விண்ணப்பம் மூலம் இங்கே 1 ஆவது உப பிரிவில் கூறப்பட்ட பணத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

9. இந்த இடைக்கால யாப்பின் கீழ் பெற்றுக்கொள்ளும் எல்லா விதமான அனுமதிப்பத்திரங்களையும் பரிசீலனை செய்யும் அதிகாரம் பிரதேச சபையின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு அதிகாரி மூலம் நடைமுறைப் படுத்தப்படுவது சட்டரீதியானதாகும்.

10. இந்த இடைக்கால யாப்பு சம்பந்தமான சகல இடையூறுகளும் தவறானதாகுவதுடன் எந்தவொரு நபரும் நீதிமன்ற அதிகாரத்துக்குட் பட்ட நீதிமன்றத்தில் குற்றம் செய்தமைக்கான குற்றவாளி என அறிவிக்கப்படும் பட்சத்தில் பிரதேச சபையின் 122 (2) அறிக்கையின் படி தண்டப்பணம் செலுத்தும் குற்றவாளி என குறிப்பிட்டதன் பின் அந்த சட்டத்தை மீறும் செயற்பாடு மீண்டும் மீண்டும் தொடர்ந்து செய்யப்படுமாயின் அந்த குற்ற செயல் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டு பிரதேச சபை தலைவரால் அல்லது செயலாளர் அல்லது அவர்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பின் அந்த குற்றம் செய்யப்படும் ஒவ்வொரு நாளுக்காகவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரிவின் வெலிகேபொல பிரதேச சபையின் அறிகையின் கீழ் 122 (2) ஆம் அறிக்கையின் படி மேலதிக தண்டப்பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படும்.

11. இந்த இடைக்கால யாப்பில் எந்த யாப்பிலும் அர்த்தம் சம்பந்தமாக சந்தேகம் எழுமாயின் இதன் சிங்களப் பிரதியே பலமுள்ளதாக அமையும்.

12. இந்த இடைக்கால யாப்பின் வேலைத்திட்டங்கள் அர்த்தம் சம்பந்தமாக பிரதேச சபை என்பதால் வெலிகேபொல பிரதேச சபையின் தலைவரையும் செயலாளர் என்பதால் வெலிகேபொல பிரதேச சபையின் செயலாளரையும் வேறு அதிகாரியையும் கிராம சேவையாளர் பொலிஸ் அதிகாரி எனவும் பொருள்படும்.

**உப பிரிவு - 01**

1. மணல், மண் மற்றும் வேறு கனிய வளங்கள் ஏற்றிச் செல்லும் ஒரு தரத்தில் கியூப்

(i) கியூப் 1-2 வரைக்கும் 1 தரத்துக்கான திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 ஆகும். ஒரு தடவைக்கு ரூபா 100 ஆகும்.

(ii) கியூப் 2-4 வரைக்கும் 1 தரத்துக்கான திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 ஆகும். ஒரு தடவைக்கு ரூபா 200 ஆகும்.

(iii) கியூப் 4 க்கு மேல் உள்ள வாகனங்களுக்கு திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 ஆகும். கியூப் 4 க்கு மேல் ஒவ்வொரு தடவைக்கும் ரூபா 10 அதிகரிக்கப்படும் ஆகும்.

2. விறகு மூங்கில் மற்றும் மரக்கட்டை ஏற்றும்போது

(i) டிரெக்டர்க்காக 1 தரத்துக்கான திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 டிரெக்டர்க்காக ஒரு தரம் ரூபா 200 ஆகும்.

(ii) லொறி டிப்பர் டிரெக் வாகனங்களுக்காக 1 தரத்துக்கான திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 லொறி டிப்பர் டிரெக் வாகனங்களுக்காக ஒரு தரம் ரூபா 300 ஆகும்.

(iii) கட்டுமான வேறு இயந்திரம் வாகனங்களுக்காக 1 தரத்துக்கான திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 கட்டுமாண வேறு இயந்திரம் (சேன் லோடர் அல்லாத) தினத்துக்கு ரூபா 1,000 ஆகும்.

**3. விவசாய தொழில்நுட்ப பொருள் ஏற்றுதல்**

(i) டொன் ஒன்று அல்லது அதன் ஒரு பகுதியோ லொறி டிப்பர் போன்றவற்றுக்கு நாள்தோறும் அல்லது மாதம் ஒன்றுக்கு ஐந்து நாட்களுக்கு மேல் (திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 ஆகும்.) ஒரு தடவைக்கு ரூபா 50 ஆகும் அல்லது மாதம் ஒன்றுக்கு 10 தினங்களுக்கு மேல் ரூபா 500 ஆகும்.

(ii) டொன் 2 மேல் லொறி டிப்பர் போன்றவற்றுக்கு நாள்தோறும் அல்லது மாதம் ஒன்றுக்கு ஐந்து நாட்களுக்கு மேல் (திருப்பி கொடுக்கப்படாத வைப்புப் பணம் ரூபா 1,000 ஆகும்.) ஒரு தடவைக்கு ரூபா 75 ஆகும். அல்லது மாதம் ஒன்றுக்கு 10 தினங்களுக்கு மேல் ரூபா 750 ஆகும்.

**உப பிரிவு - 02**

**வாகனம் நிறுத்தி வைக்கப்பட கூடாத இடமும் நேரமும்**

(1) ஓப்பநாயக்க இ/வித்தியாகர இசுரு வித்தியாலய அருகில் கிழமை நாட்களில் 5 நாளும் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை.

(2) வெலிகெபொல இ/வலகம்பா மத்திய மகா வித்தியாலய அருகில் கிழமை நாட்களில் 5 நாளும் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை.

(3) வெலிகெபொல கிழமை சந்தை நடைப்பெறும் நாட்களில் சந்தை சூழவுள்ள பிரதேசத்தில் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை.

(4) ஓப்பநாயக்க பிரதேசத்தில் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 2.00 மணி வரை.

12-803

**வெலிகெபொல பிரதேச சபை**

*துணை விதிகள்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் வெலிகெபொல பிரதேச சபையினால் சம்மதிக்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள துணைவிதிகள் பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆம் பிரிவின் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபை உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சராகிய என்னால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை அலுவலகம்,*
*புதிய நகரம்,*
*இரத்தினபுரி.*

**வாகனங்கள் நிறுத்துதல் சம்பந்தமான ஒழுங்கு முறைமைகளை கையாளும் இடைக்காலச் யாப்பு**

*1. இவ் இடைக்காலச் யாப்பு வெலிகெபொல பிரதேச சபையின் அதிகாரத்துக்கும் உட்பட்ட பிரதேசத்தினுள் மோட்டார் வாகனங்கள் நிறுத்தும் இடங்களை பரிபாலனம் செய்தலை இடைக்காலச் யாப்பு என அறிமுகம் செய்யலாம்.*

*2. வெலிகெபொல பிரதேச சபை (இதில் "சபை" என்று குறிப்பிடப்படுவது) எல்லைக்குள் நிர்வகிக்கப்படும் மோட்டார் கார், மோட்டார் வாகனப்பெட்டி, லொறி, பஸ், மோட்டார் சைக்கில், முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் (மோட்டார் வாகன பெட்டி) பொது வாகனம் நிறுத்தும் இடம் இந்த இடைக்கால யாப்பின் உபபிரிவு 2 இலும் உப பிரிவு இல. 3 இலும் குறிப்பிட்ட தொகையை சபைக்கு செலுத்துவதன் மூலம் பொது இடங்களின் வாகனங்கள் நிறுத்தி வைக்கலாம்.*

*3. பொது வாகனம் நிறுத்தி வைக்கும் இடத்தை விட மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகன பெட்டி ஒன்று, லொறி ஒன்று, பஸ் ஒன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று, முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் ஒன்று எவறாலும் வேறு இடங்களில் நிறுத்தி வைப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.*

*4. பொது மோட்டார் வாகனம் நிறுத்தும் இடத்துக்குள் வேறு ஒருவர் (யாரும்) மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகன பெட்டி ஒன்று, லொறி ஒன்று, பஸ் ஒன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் அந்த வான உரிமையாளரிடம் அல்லது சாரதியிடம் தமது பிரதேச சபையின் மூலம் வழங்கப்பட்ட அனுமதி பத்திரம் இன்றி பொது இடங்களில் மோட்டார் வாகனம் நிறுத்தி வைப்பது தடை செய்யப்பட்டுள்ளது.*

*5. வெலிகெபொல பிரதேச சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள வேண்டுகோளின் பிரகாரம் அதன் அனுமதி பத்திரம் வழங்கப்படுவதுடன் எல்லா அனுமதி பத்திரங்களும் தினம் தோறும் மணித்தியாலங்களுக்கு அல்லது மாதாந்தம் என்ற வகையில் வழங்கப்படும். அதில் சகல அனுமதி பத்திரங்களும் தேவைக்கு ஏற்ப இங்கு 2 ஆம், 3 ஆம் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நாளாந்த அல்லது மாதாந்த கொடுப்பனவை செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.*

*6. இடைக்காலச் சட்டத்தின் 4 இன் கீழ் வழங்கப்படும் சகல அனுமதிப் பத்திரங்களும் அந்த அனுமதி பத்திரம் வழங்கப்படும். உரிய மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகன பெட்டி ஒன்று, லொறி ஒன்று, பஸ் ஒன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் சம்பந்தமான அந்த மோட்டார் வாகனத்தை இனங்கண்டு கொள்வதற்காக விளக்கமாக அதன் இலக்கம் தெளிவாக இருத்தலுடன் அனுமதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் செல்லுப்படியாகும்.*

*7. இடைக்காலச் சட்டத்தின் 4 இன் கீழ் பொது வாகனம் நிறுத்தும் இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனம் மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகன பெட்டி ஒன்று, லொறி ஒன்று, பஸ் ஒன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம்*

ஒன்று உரிமையாளர் அல்லது சாரதியினால் அந்த வாகனம் சம்பந்தமாக வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு பொலிசார் அல்லது வாகன பரிபாலன சபையினர் அல்லது அந்த விடயம் சம்பந்தமாக சபையினால் பொறுப்பு வழங்கப்பட்ட அதிகாரியினால் கேட்கும்போது அல்லது சந்தர்ப்பதில் அனுமதிப் பத்திரம் பரிசீலனைக்காக கையளிக்கப்பட வேண்டும்.

8. ஏதாவது பொது வாகனம் நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் உரிய வகை அல்லது வாகனத்தின் மோட்டார் வாகனத்துக்காக மாத்திரம் வேறாக ஒதுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தின் யாராவது ஒருவரால் அந்த வாகனம் நிறுத்தப்பட்டுள்ள இடத்துக்கு அந்த வகை அல்லது வர்க்கத்துக்கு பொருத்தமற்ற வேறு மோட்டார் வாகனம் உட்கொண்டு செல்லல் அல்லது நிறுத்துதல் கூடாது.

9. யாராவது ஒருவர் மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகன பெட்டி ஒன்று, லொறி ஒன்று, பஸ் ஒன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் ஒன்று பொது வாகனம் நிறுத்தும் இடத்துக்கும் உட்செல்வாராயின் அல்லது வெளிச்செல்வாராயின் அல்லது மோட்டார் கார் ஒன்றுக்கு, மோட்டார் வாகன பெட்டி ஒன்றுக்கு, லொறி ஒன்றுக்கு, பஸ் ஒன்றுக்கு, மோட்டார் சைக்கில் ஒன்றுக்கு, முச்சக்கர வண்டி ஒன்றுக்கு அல்லது வேறு மோட்டார் வாகனம் ஒன்றுக்கு இடையூறு உண்டாக்கும் வகையில் மோட்டார் வாகனம் நிறுத்தி வைத்திருத்தல் கூடாது.

10. எவராவது ஒருவர் மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகனம் ஒன்று, லொறி ஒன்று, பஸ் ஒன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, முச்சக்கர வண்டி ஒன்று அல்லாத வேறு மோட்டார் வாகனம் பொது வாகன தரிப்பிடத்தில் உட்செலுத்தும் அல்லது வெளியாகும் போது அல்லது மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகனம் ஒன்று, லொறி ஒன்று, பஸ் வண்டி ஒன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, முச்சக்கர வண்டி ஒன்று அல்லது மோட்டார் வாகனத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் நிறுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

11. யாராவது ஒருவர் பொது வாகனம் நிறுத்தும் இடத்தில் மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகன பெட்டி ஒன்று, லொறி ஒன்று, பஸ் ஒன்று, மோட்டார் சைக்கில் ஒன்று, முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கும் சந்தர்ப்பத்தில் அந்த மோட்டார் வாகனம் ஒன்றை கழுவுதல் அல்லது கழுவுவதற்காக ஏற்பாடு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

12. யாராவது ஒருவரால் பொது வாகனம் நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் மோட்டார் கார் ஒன்று, மோட்டார் வாகன பெட்டி ஒன்று அல்லது வேறு ஏதாவது மோட்டார் வாகனம் சீர்திருத்தல் வேலை செய்தல் போது வாகனம் நிறுத்தப்பட்டுள்ள இடத்தில் அந்த வாகனம் அகற்றப்படுவதற்காக அவ்வாறு சீர்திருத்தம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால் ஒழிய செய்யக்கூடாது.

13. யாராவது ஒருவர் பொது வாகனம் நிறுத்தப்பட்டுள்ள இடத்துக்குள் ஏதாவது தவறான நடத்தை அல்லது இடையூறு விளைவித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

14. கூட்டுத்தாபனப்படுத்தப்பட்ட அல்லது கூட்டுத்தாபனப்படுத்தப்படாத தனியார் சபை மூலம் அவர்களின் மோட்டார் கார், மோட்டார் வாகன பெட்டி, லொறி, பஸ், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் சம்பந்தமான குறிப்பிட்டளவு பணம் சபைக்கு செலுத்தி அந்த கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டுத்தாபனப்படுத்தப்படாத தனியார் சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனம் சம்பந்தமாக குறிக்கப்பட்ட பணத்தை சபைக்கு செலுத்தி அந்த கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டுத்தாபனப்படுத்தப்படாத அந்த தனியார் சபைக்கு சொந்தமான மோட்டார் வாகனம் சம்பந்தமாக மாதாந்த அனுமதி பத்திரம் பெற்றுக்கொள்ள முடியும் (அரசு அமைச்சுக்களின் திணைக்களங்களின் வாகனங்களுக்கு இதில் இருந்து பூரண சுதந்திரம் உண்டு).

15. (அ) இந்த இடைக்கால சட்ட வர்த்தமானி பத்திரிகையின் முதலாம் நாள் தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்.

(ஆ) ஒவ்வொரு நாளும் முற்பகல் 6.00 மணிமுதல் பி. ப. 6.00 மணிவரை இந்த இடைக்காலச் சட்டத்தின் அதிகாரம் அமுலில் இருக்கும்.

16. சபையின் எழுத்துமூலமான கட்டளையின் நிச்சயமான கட்டளையின் நிச்சயமான நபரால் அல்லது வகுப்பினரால் அவர்களின் மோட்டார் கார், மோட்டார் வாகன பெட்டி, லொறி, பஸ், மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி அல்லது வேறு மோட்டார் வாகனம் சம்பந்தமான இந்த இடைக்காலச் சட்டத்தில் பணம் செலுத்துவதில் இருந்து சுதந்திரம் அளிக்கப்படும்.

17. இந்த இடைக்காலச் சட்டம் சம்பந்தமான சகல அல்லது யாராவது கட்டளைகளை மீறுவது தவறாகுவதுடன் ஏதாவது நீதிமன்ற அதிகாரம் உள்ள நீதிமன்றதத்தில் குற்றவாளியாக காணப்பட்டால் அந்நபருக்கு அந்த குற்றசெயல் சம்பந்தமான ரூபா 750 க்கு மேற்படாத தண்டப்பணம் அறவிட முடிவதுடன் அத்தவறு மீண்டும் செய்யுமிடத்து அதிகாரம் உள்ள நீதிமன்றத்தின் மூலம் அது சம்பந்தமாக குற்றவாளியாக காணப்படுவதுடன் அத்தவறு இழைத்தமைக்காக சபை தலைவர் மூலம் எழுத்து மூல அறிவித்தலின் பின் அத்தவறு மீண்டும் புரியும் இடத்து ஒரு நாளுக்கு ரூபா 250 க்கு மேற்படாத தண்டப்பணம் அறவிட வேண்டும்.

18. இந்த இடைக்கால சட்டத்தில் இந்த சபை என்னும் பதம் வெலிகெபொல பிரதேச சபையின் தலைவர் விசேட ஆணையாளர், அதிகாரம் உடைய அதிகாரி என அடையாளப்படுத்தப்படும்.

*19. இந்த இடைக்கால சட்டத்தில் தமிழ் மொழியிலும், ஆங்கில மொழியிலும் உள்ள பிரதிகளில் பொருந்தாத சில சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி பிரதியே செல்லுபடியானதாகும்.*

*20. முச்சக்கர வண்டியின் உரிமையாளர்களால் அமைக்கப்படும் தனியார் மயப்பட்ட சங்கங்களை நிர்வகிப்பதற்காகவும் சலுகைகள் வழங்கப்படுவதற்காகவும் பிரதேச சபையினால் குழு ஒன்றினை அமைத்து நிர்வகிக்கப்படும்.*

*அந்த குழவின் தலைவராக பிரதேச சபையின் தலைவர் இருப்பதோடு செயலாளராக சபையின் செயலாளர் இருப்பார். சபையின் அமைச்சர்கள் மூவர் வாகனங்களுக்கு பொறுப்பாகவும் இக்குழுவின் ஒரு அங்கத்தவராக அதிகாரப் பகுதியின் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அல்லது அவரினால் நியமிக்கப்படும் அவரது பிரதி நிதி ஒருவருடன் பிரதேச சபையின் இவ்விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அதிகாரியும் ஒரு அங்கத்தவராவர்.*

*''லொறி'' என்பதால் குறிக்கப்படுவது மோட்டார் வாகனம் அல்லது விசேடமாக பொருட்கள் ஏற்றி செல்லும் வாகனம் அல்லது வாகன உதிரிப்பெட்டி அல்லது பாவனைக்காக பயன்படுத்தும் வாகனம். ஆனாலும் விவசாய நிலங்களுக்குள் பயன்படுத்தும் உபகரண வாகனங்கள் இந்த வர்க்கத்துக்குள் அடங்காது.*

*''மோட்டார் கார்'' என்பதால் குறிக்கப்படுவது மோட்டார் வாகனம் ஆனால் மோட்டார் சைக்களில் அம்புலன்ஸ் (அவசர நோயாளிகளை அழைத்து செல்லும் வாகனம், பிணங்களை கொண்டு செல்லும் வாகனம் அல்லது அங்கவீனரக்ள் பயணிக்கும் சாரதியுடன் மக்கள் 8 பேருக்கு அதிகப்படாது எண்ணிக்கையுடன் அவர்களுக்கு சொந்தமான பொருட்கள் கொண்டு செல்லுவதற்காக வாகன உதிரி பெட்டியுடன் செய்யப்பட்ட வாகனம் அடங்காது.)*

*''மோட்டார் வாகனப்பெட்டி'' என்பதால் குறிக்கப்படுவது மோட்டார் வாகனம் அவசர நோயாளிகளை அழைத்து செல்லும் மினி கார் அல்ல. இது சாரதியுடன் மக்கள் 8 பேரினதும் அவர்களது தனிப்பட்ட பொருட்கள் ஏற்றி செல்லும் டெய்லருடன் அமைக்கப்பட்டிருக்கும்.*

*''மோட்டார் சைக்கில்'' என்பதால் குறிக்கப்படுவது சில்லுகள் மூன்றுக்கு அதிகளவில் செய்யப்பட்ட வாகனம் ஆகும். இவ் வாகனத்தின் பாரமும் ஒரு புறத்தில் இணைக்கப்பட்டுள்ள கார் ஒன்றின் பாரம் மோட்டார் 5 க்கு குறைந்ததாகும்.*

*(அ) இயந்திரத்துக்கு முன்பாக அல்லது பின்பாக செயற்படும் எந்த வாகன டெய்லருடன் கூடிய டெக்டர் அல்லது பிரதான பாதையின் பாவனைக்காக உபயோகப்படுத்தப்படும் மோட்டார் வாகன பதிவாளர் மூலம் அனுமதியளிக்கப்பட்ட வாகனம் ஆகும். பாதைகளை சீர் செய்யும் ரோலர் என்பது இந்த வர்க்கத்தை சேர்ந்தது அல்ல.*

*அல்லது*

*(ஆ) இயந்திரத்துக்கு முன்னால் அல்லது பின்னால் செயற்படும் விவசாய தொழில்நுட்பம் சம்பந்தமாக விவசாய நில பாவனைக்காக அல்லது கட்டிட நிர்மாணத்துக்காக நிலத்தை மட்டுப்படுத்துதல் ஆறுகள், நதிகள் என்பவற்றில் சேறுகளும், மணலும் அகற்றுவதற்காக மண் எடுப்பதற்கும் ஏற்றுவதற்கும் அல்லது அவற்றுக்கு சமமான செயற்பாடுகள் பாவனைப்படுத்தப்படும் வாகனம் மோட்டார் வாகன பதிவாளரால் அனுமதிக்கப்பட்ட வாகனம் பாதைக்கான சீர் செய்யும் ரோலர் இந்த வர்க்கத்தில் அடங்காது.*

*''பஸ் வண்டி'' என்பது மோட்டார் வண்டி பெட்டியாகும். இது பஸ் வண்டி என்ற பெயரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பயணிகள் பிரயாணம் செய்வதற்காக பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனம் ஆகும்.*

*''நிறுத்துதல்'' என்பதாவது மோட்டார் வாகனம் ஏதாவது காரணத்துக்காக நிறுத்தி வைக்கப்படுதல். ஆனாலும் பயணிகளோ பொருட்களோ ஏற்றுவதற்கு அல்ல.*

*''பொலிஸ் அதிகாரி'' என்பது, சீருடையில் இருக்கும் பொலிஸ் சேவையாளர் ஆகும். ''நிச்சயமாக'' என்பது (அ) உப பிரிவில் அல்லது (ஆ) உப கிளையில் உள்ளவாறு கட்டாயமாக்கப்பட்டதும்.*

*''வாகன பரிபலித்தல்'' (வாகன கட்டுப்படுத்தல்) என்பது பிரதேச சபையால் மோட்டார் வாகனம் நிறுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட பொது வாகனம் நிறுத்தும் இடங்களில் நிறுத்தும் வாகனங்களுக்கு அனுமதி பத்திரம் வழங்குவதற்காக தலைவரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் உள்ள ஒருவராவார்.*

**உப பிரிவு இலக்கம் - 1**

**வாகனம் நிறுத்தி வைப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள்**

**ஓப்பநாயக்க பிரதேச செயலாளர் பிரிவு**
**முச்சக்கர வண்டி தரிப்பிடம்**

(1) கென்தகெடிய சந்தி பஸ் தரிப்பு அருகில் முச்சக்கரவண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(2) மாதொல பன்சலை சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(3) ஹெலமுல்ல வங்கு சந்தியில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(4) ஹொரன்கந்துள சந்தி பஸ் தரிப்பிடம் அருகில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(5) உடவெல அக்ரெல்ல வீதி முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(6) கன்தேவிஹார சந்தி, கல்ஹிர சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம் (வலது பக்கம்)

(7) கரகஹட்ட சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

(8) போகஹ சந்தி வல்லகெடிய பாதைக்கு முன் முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(9) ஓப்பநாயக்க விஜயராம பன்சல சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(10) ஓப்பநாயக்க சந்தைக்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (வலது பக்கம்)

(11) ஓப்பநாயக்க ஹோராஸ்ம்பல முன்னிலையில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(12) தெல்கஸ் சந்தி போகஹயட்ட சந்தி முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(13) தெல்கஸ் சந்தி ஹக்தெல்ல வீதிக்கு தரிப்பு பகுதி.

(14) தாந்தாவ பாலத்துக்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(15) ஹீனுவல சந்தி இறப்பர் தொழிற்சாலை முன்னிலையில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(16) பொலபொக்க சந்தி ஹீனுவெல பாலத்துக்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம் (இடது பக்கம்)

(17) ஹல்லின்ன சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம் (வலது பக்கம்)

(18) அமுவத்த சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

(19) மெடியக்வல வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**ஹீனுவல - மெடியக்வல வீதி**

(20) ஹீனுவல பிரதேச வைத்தியசாலை அருகில் முச்சக்கர வண்டி தரிப்பிடம்

(21) ஹீனுவல இறப்பர் தொழிற்சாலை முன்னிலையில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**தெல்கஸ் சந்தி - பட்டந்துர சந்தி வீதி**

(22) விக்தெல்ல பாதை ஹக்தெல்ல சந்தி இறப்பர் தொழிற்சாலை முன்னிலையில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்

(23) பட்டந்துர சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**உடவெல சந்தி - ரங்வல வீதி**

(24) அக்கெரல்ல வீதி பரங்கஹமடித்த சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

(25) அக்கரெல்ல வீதி உடவெல சந்தி, உடகம சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**ஓப்பநாயக்க பிரதேச செயலாளர் பிரிவு**

**லொறி, வேன், பாடசாலை பேரூந்து வண்டி**

(1) தெல்கஸ் சந்தி பெலதவான முன்னுள்ள தரிப்பிடம்

(2) தெல்கஸ் சந்தி போதிக்கு முன்னுள்ள தரிப்பிடம்

(3) ஓப்பநாயக்க பாடசாலை/பேசர்கம நிலையம் முன்னுள்ள தரிப்பிடம்

(4) ஹல்லின்ன சந்தி பஸ் தரிப்பிடம் முன்னுள்ள தரிப்பிடம்

(5) ஓப்பநாயக்க மக்கள் வங்கி முன்னுள்ள தரிப்பிடம்

(6) ஓப்பநாயக்க மிதேல்தெனிய பாதை சந்தி தொடக்கம் இடதுபக்க தரிப்பு இடம்

**வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவு**

**முச்சக்கர வண்டி தரிப்பிடம்**

(1) பலாங்கொடை பல்லேபேத்த வீதியில்
(1) சந்த கனாகம சந்தியில் முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(2) கோங்கஸ் தென்ன சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(3) பனான பஸ் தரிப்பிடம் அருகில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(4) பொல்லமுர சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(5) வெலிகெபொல வைத்தியசாலை முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(6) வெலிகெபொல உதேனி வீரசேகர வீதி அருகில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(7) வெலிகெபொல சரத் ஸ்டோர் முன்னிலையில்
(8) வெலிகெபொல இலங்கை வங்கி முன்னிலையில்
(9) மெதகங் ஓய சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(10) குலரத்ன கம்மான சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(11) ஹவான சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(12) கஜீவத்த அருகில் உள்ள சந்தி (அக்கர கொட) முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(13) 25 ஏக்கர் சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம் (அம்பேவில)
(14) அம்பேவில சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(15) மகயாய சந்தி (சமூபகார முன்னிலையில்) முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(16) கட்டுவாவ கந்த பாலத்துக்கு முன் முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(17) உனுவெல போதிக்கு அருகில் முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(18) மஹாஹோராவ சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(19) ரங்வல வைத்தியசாலை அருகில் முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(20) தென்னஹேன சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(21) ரங்வல பன்சல அருகில் முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(22) சந்தனமாமம் சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(23) தெலவல கந்த சந்தி (உடரங்வல) முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**பொல்லமுர கபுகல வீதி**

(24) ஹர்த்த கிரிய பஸ் தரிப்பிடம் அருகில் வெலிகெபொல யடிபஸ்கமுவ வீதி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**வெலிகெபொல - யடிபஸ்கமுவ**

(25) யடிபஸ்கமுவ சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**வெலிகெபொல முத்தேட்டுப்பல வீதி**

(26) ஹெவன்தெனிய சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(27) முத்தெட்டுப்பல பாடசாலை சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**கல்பார**

(28) முத்தெட்டுப்பல பாடசாலை சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(29) கொக்வலயாய சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(30) கல்பார சந்தை முன்னுள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(31) கல்பாய பாடசாலை அருகில் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(32) கல்பாய பம்பரகால சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(33) கொலொன்கஸ்யாய சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்
(34) தெலம்புகஹ அத்துர மடுவ கடை சந்தி முச்சக்கர வண்டி தரிப்பிடம்

**லொறி, வேன், பாடசாலை பேரூந்து வண்டி**

**வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவு**

(1) வெலிகெபொல முச்சந்தியில் ட்ரான்ஸ் போமர் அருகில் உள்ள தரிப்பிடம்

(2) தொட்டமுல் வல வீதியில் வெலிகெபொல நகரில் இருந்து தொட்டமுல் வல வரை (இடது பக்கம்)

**பரநிகாமபுத்த கோன்கஸ் தென்ன வீதி**

(1) இலுக்கும்புர மெத்தகந்த வீதி அருகில் உள்ள தரிப்பிடம்

(2) பனான பஸ் தரிப்பிடம் அருகில் உள்ள தரிப்பிடம்

**உப பிரிவு இலக்கம் 2**

| | | முதல் ஒரு மணித்தியாலத்துக்குள் பாகங்களுக்கான அறவிடும் பணத்தொகை | முதல் ஒரு மணித்தியாலத்துக்கு மேல் 4 மணித்தியாலத் துக்கு அதிகப்படாத எல்லா மேலதிக அரை மணித்தியாலத்துக்கோ அதன் அறவிடும் பணத்தொகை | 4 மணித்தியாலத்துக்கு மேலதிக ஒவ்வொரு அரை மணித்தியாலத் துக்கும் அதன் அறவிடும் பணத்தொகை |
|---|---|---|---|---|
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| (அ) | மோட்டார் சைக்கில்களுக்காக | இல்லை | இல்லை | இல்லை |
| (ஆ) | மோட்டார் வாகனம் அல்லது மோட்டார் புகைவண்டி அல்லது முச்சக்கர வண்டிக்காக | 2 0 | 1 0 | 1 0 |
| (இ) | டெய்லருடன் கூடிய ரெக்வண்டி அல்லது லொறி வண்டிக்காக | 3 0 | 1 50 | 1 50 |
| (ஈ) | டெய்லருடன் கூடிய ரெக் வண்டி அல்லது வேறு வாகனங்கள் | 2 0 | 1 0 | 1 0 |
| (உ) | பஸ் வண்டிக்காக | 3 0 | 2 0 | 2 0 |

**உப பிரிவு இலக்கம் 3**

| | | ரூபா ச. |
|---|---|---|
| 1 | முச்சக்கர வண்டிக்காக மாதாந்தம் | 100 0 |
| 2 | கார் அல்லது வேன் வாகனங்களுக்காக மாதாந்தம் | 150 0 |
| 3 | (1) பெரிய லொறிக்காக மாதாந்தம் | 200 0 |
| 4 | (2) சிறிய லொறிக்காக மாதாந்தம் | 150 0 |
| 5 | (3) ட்ரெக்டர் வண்டிக்காக மாதாந்தம் | 75 0 |
| 6 | பஸ் வண்டிக்காக மாதாந்தம் | 300 0 |

12-804

**வெலிகெபொல பிரதேச சபை**

இடைச்சட்டம்

*1989 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) உப பிரிவின் உடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய அச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் வெலிகெபொல பிரதேச சபையினால் 2012.10.31 ஆந் திகதி அனுமதிக்கப்பட்டுள்ள பிரதேச சபை செய்யப்பட்ட வாகனங்களின் நிறை மற்றும் வேகம் செய்தல் மற்றும் நடத்துதலை நேர்த்தியாக்குவது சம்பந்தமான (இடைச்சட்டம்) 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (தொடர் நிலைச்சட்டம்) இச்சட்டத்தின் கீழ் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவினால் என்னிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி சப்பிரகமுவ மாகாண சபையின் மாகாண நிருவாக பொறுப்பு அமைச்சர் மஹீபால ஹேரத் ஆகிய என்னால் அனுமதி வழங்கப்பட்டதாகவும் இந்த அறிவித்தல் வர்த்தமானப் பத்திரிகையின் வெளியிடும் நாள் தொடக்கம் அந்த இடைச்சட்டத்தின் வெலிகெபொல பிரதேசத்தினுள்ளே செயற்படும் எனவும் இங்கு அறிவிக்கப்படுகின்றது.*

*மஹீபால ஹேரத்,*
*மாகாண நிருவாக பொறுப்பு அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*சப்பிரகமுவ மாகாண சபை பிரதான அமைச்சு அலுவலகம்,*

**வெலிகெபொல பிரதேச சபை**
***(நீர் வழங்கல் பிரிவு)***

*(அ) விண்ணப்பம் (9 ஆம் இடைக்கால விதி)*

1. (i) விண்ணப்பதாரியின் முழுப் பெயர் :----. [ ]
(தமிழில் தெளிவாக) மதகுரு/திரு./திருமதி/செல்வி
(ii) முதலெழுத்துக்களுடன்
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
Rev./Mr./Mrs/Miss (தேவையான சொற்களைவிட்டு ஏனையவற்றை வெட்டிவிடுக.)
(iii) அடையாள அட்டை இல. :- [ ]

2. நீர் இணைப்பு தேவையான இடத்தின் முகவரி :- [ ]
(தமிழில் தெளிவாக)
(i) வீட்டு இலககம் [ ]
குறுக்கு வீதி [ ]
கிராமிய/பிரதான வீதி [ ]
நகரம் [ ]
மாவட்டம் [ ]
பிரதேச செயலாளர் பிரிவு [ ]
(ii) கிராம அலுவலர் பிரிவு [ ]

3. (i) கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி :- [ ]
(ii) வீட்டு தொலைபேசி இலக்கம் :- [ ]

4. விண்ணப்பதாரியின் உரிய இடத்தின் உரிமையாளர்/குத்தகையாளர்/கூலிக்கு வசிப்போர் [ ]

5. வரிப்பண சான்றிதழ்/கிராம அலுவலரின் வதிவிட சான்றிதழ்/இடத்தின் ஒப்பனை கையளிக்கின்றேன்.
(தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்)

6. (i) நுகர்வோர் சேவைக்கான வங்கியின் பெயர் : [ ]
(ii) கணக்கு இலக்கம் : [ ]

7. (i) இந்த இடத்துக்கு இதற்கு முன்னர் நீர் வழங்கப்பட்டுள்ளது [ ]
(ii) வழங்கியிருப்பின் பிரிவு : [ ]
(வீட்டு/அரச/வர்த்தக/மத நிறுவன)

8. நீங்கள் நீர் வழங்கலை விண்ணப்பிக்கும் இடத்தில் ஏதாவது சமூக சங்க நீர் வழங்கல் திட்டத்தின் செயற்படுகின்றதா? (ஆம்/ இல்லை)

9. நீர் வழங்கல் சம்பந்தமாக உரிய இடத்துக்கு இலகுவாக தேடிக் கொள்ள தேவையான முழு விபரங்களை படவரைபு மூலம் அட்டவணைப்படுத்திக் காட்டுக.

| |
|---|
| |

அருகில் உள்ள வீட்டில் நீர் இணைப்பு இருப்பின் வசிப்பாளரின் பெயர் :----.

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் நீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக இதற்கென உள்ள அறிவுறுத்தல்களை வாசித்து நன்றாக விளங்கிக் கொண்டதுடன், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படடுள்ள விபரங்கள் உண்மையானது எனவும் பொய்யான தகவல்கள் வழங்கியிருப்பின் நீர் இணைப்பு துண்டிப்பதற்கு வெலிகெபொல பிரதேச சபைக்கு அதிகாரம் உள்ளது என்பதை விளங்கி கீழே கையொப்பம் இடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**அலுவலக உபயோகத்துக்காக**

1. விண்ணப்பம் வழங்கப்பட்ட திகதி :- | | | | | | | | | | | | |
2. பதிவிலக்கம் :- | | | | | | | | | | | | |

1. நில அளவையாளர் சான்றிதழ் :..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

2. வழங்கப்பட்ட நீர் இணைப்பு சம்பந்தமான விபரம் :
(i) குடியிருப்பு/அரச/வர்த்தக/சமய நிறுவனம்

3. நீர்மாணி வர்க்கம் [ ]

4. நீர்மாணியின் பருமன் [ ]

5. நீர் இணைப்பு வழங்கப்பட்ட திகதிக்கு வாசிப்பு [ ]

6. நீர்மாணி விபரம் [ ]

7. நீர் இணைப்பு வழங்கப்பட்ட திகதி [ ]

-------,
தலைவரின் சான்றிதழ்
வழங்கப்படுகின்றது/ வழங்கப்படவில்லை.

அனுமதி வழங்கப்படவில்லையாயின் காரணம் : ..........................................................................
..........................................................................
..........................................................................

திகதி :----.

| | |
|---|---|
| லிகிதரின் குறிப்பு | |
| வைப்பு செய்த பணம் | |
| ரசிது இலக்கமும் திகதியும் | |
| நீர் வழங்கல் பிரிவுக்கு அனுப்பியது | |
| வேலைமுற்று பெற்றமைக்கான நில அளவை அதிகாரியின் குறிப்பு | |

திகதி :----. ------,
நில அளவையாளரின் கையொப்பம்.

**வெலிகெபொல பிரதேச சபை**

**("எ" விண்ணப்பம் (42 ஆவது இடைக்கால துணைவிதி)**

1. ஒரு பிரிவினர் என்னும் (இங்கு பின்வரும் சொந்தக்காரர், என்பதால் குறிப்பிடப்படுவது ..................................................... இடத்தில் வரிப்பண இலக்கம் ............................... எனும் இடத்தின் சொந்தக்காரர்/வசிப்பவர் என்னும் நான் ...................... உடன் பிரிவினர் என வெலிகெபொல பிரதேச சபையினர் உடன் வீட்டு காரியங்களுக்காக/வீட்டு காரியங்களுக்கு அல்லாத காரியங்களுக்காக நீரைப் பெற்றுக்கொள்வதற்காக செய்யப்பட்ட ஒப்பந்தமாகும்.

2. வீடுகளுக்கு அல்லாத காரியங்களுக்காக மேலே கூறப்பட்டுள்ள இடத்திற்கு நீர் சேவைக்கான ஒப்பந்தமானது, அதன்படி,

(அ) ..........................................................................................................................................................................
(ஆ) ..........................................................................................................................................................................
(இ) ..........................................................................................................................................................................

இங்கு கூறப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடன்படுவதற்கு சொந்தக்காரர்/வசிப்பாளர் இத்தால் சம்மதிக்கிறார்.

(அ) அங்குலம் .............................................................. கொள்கலத்தால் நீர் வழங்கப்படும்.
(ஆ) சொந்தக்காரர் மூலம் கொள்கலன் பணத்தொகை சேவை பணம் மற்றும் பிணைப்பு வைப்புத் தொகை தொகை ரூபா ...................................... பணம் சேவைகள் வழங்கல்களுக்கு முன் பிரதேச சபையின் தலைவருக்கு வழங்க வேண்டும்.
(இ) ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் நீரின் அளவுக்காக சபை மூலம் தீர்மானிக்கப்படும் தொகை மூலம் பிரதேச சபையின் தலைவருக்கு செலுத்துவதற்கு சம்மதிக்க வேண்டும்.

3. கொள்கலன்களுக்காக அல்லது நீருக்கான தொகை குறிப்பிட்ட தினத்தில் 15 நாட்களுக்குள் பிரதேச சபையின் தலைவருக்கு வழங்கப்படாவிட்டால் சேவை பெறுவதற்கான தகுதியை இழக்கும் அதே நேரம் பிரதேச சபை மூலம் சேவை நிறுத்தமுடியும்.

4. இரு வகுப்பினரில் எந்த வகுப்பினராலும் ஒப்பந்தம் முடிவுறுவதற்கு கருதும் போது 30 நாட்களுக்கு முன் அறிவித்தல் ஒன்றின் மூலம் அடுத்த தரப்பினருக்கு அறியப்படுத்துவதன் மூலம் ஒப்பந்தத்தை நிறைவு செய்ய முடியும். அது அவ்வாறு நிறைவுசெய்யப்பட்டதன் பின் புதிய ஒப்பந்தம் செய்யும் வரை இடத்தின் சொந்தக்காரர்/வசிப்பாளர் சேவை பெறும் தகுதியற்றுப்போகும்.

வசிப்பாளர் மாறுவதற்கு அண்மிக்கும் எந்த சந்தர்ப்பத்தில் சொந்தக்காரரால் வரையறைபடுத்தி அறிவிக்க முடிவதுடன், மேலே குறிப்பிடப்பட்ட சட்டதிட்டங்களை ஏற்று எழுத்து மூலமாக செய்யப்படுகின்ற ஒப்பந்தம் வரை எந்தவொரு வசிப்பாளருக்கும் சேவைகள் பெற்றுக்கொள்ள உரித்தில்லை.

201.................. மாதம் ............................... ஆந் திகதி கையொப்பம் இடப்பட்டது.

-----------,
பிரதேச சபை தலைவர்

-----------,
சொந்தக்காரர்/வசிப்பாளர்.

கையெழுத்திற்கு சாட்சி :-

12-805

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.